# பிரித்தானிய தமிழர் பேரவை
## பிரித்தானியா

19 August 2026

## செம்மணி புதைகுழிகள்: தடயவியல் கண்டுபிடிப்புகள் மற்றும் சர்வதேச சட்டக் கட்டமைப்புகள் பற்றிய இடைக்காலக் கண்ணோட்டம்

செம்மணி புதைகுழியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடயவியல் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட ஆதாரங்கள், சர்வதேச சட்டங்களின் கீழ் கடுமையான குற்றங்கள் நிகழ்ந்திருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. இவை பின்வரும் சர்வதேச சட்டக் கட்டமைப்புகளின் கீழ் ஆராயப்பட வேண்டியவையாகும்:

- **இன அழிப்பு:** 1948 இன அழிப்புத் தடுப்பு ஒப்பந்தம் / ரோம் சட்டம் - பிரிவு 6
- **மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்:** ரோம் சட்டம் - பிரிவு 7
- **போர்க்குற்றங்கள்:** ஜெனீவா ஒப்பந்தங்கள் / ரோம் சட்டம் - பிரிவு 8
- **வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான குற்றங்கள்:** International Convention for the Protection of All Persons from Enforced Disappearance - ICPPED
- **நீதிமுறைக்குப் புறம்பான, உடனடியான, மற்றும் சட்டதிட்டத்துக்கு உட்படாத மரண தண்டனைகள்:** ICCPR - பிரிவு 6 / ஐ.நா. Minnesota Protocol

## செம்மணி அகழாய்வு – புதுப்பிக்கப்பட்ட காலவரிசை (2025 – ஆகஸ்ட் 2026)

அட்டவணை **1:** மறு கண்டுபிடிப்பு **&** ஆரம்ப அகழ்வாராய்ச்சிகள் **(2025)**

| காலப்பகுதி | கண்டறியப்பட்ட மனித எச்சங்கள் | முக்கிய நிகழ்வுகள் & கண்டுபிடிப்புகள் |
|---|---|---|
| பிப்ரவரி 2025 | ஆரம்பக் கண்டுபிடிப்பு | செம்மணியின் புறநகர்ப்பகுதியில் இந்து மயானம் அமைப்பதற்காக நிலம் தயார் செய்தபோது மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டு, யாழ்ப்பாண நீதவான் நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணை தொடங்கியது. |
| மே – ஜூன் 2025 | 19 | பேராசிரியர் ராஜ் சோமதேவா தலைமையில் நீதிமன்ற மேற்பார்வையில் அகழாய்வு தொடங்கியது. 10 மாதங்களுக்கு உட்பட்ட 3 குழந்தைகள் உட்பட 19 மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| ஜூலை – ஆகஸ்ட் 2025 | அகழாய்வு விரிவாக்கம் | செயற்கைக்கோள் மற்றும் ட்ரோன் வரைபடங்கள் மூலம் புதிய புதைகுழி பகுதிகள் அடையாளம் காணப்பட்டன. சிறுவனின் நீல நிற பாடசாலைப் பை, விளையாட்டுப் பொருள், கண்ணாடி வளையல்கள் மற்றும் ஆடைத்துண்டுகள் மீட்கப்பட்டன. |
| செப்டம்பர் 2025 | HRCSL அறிக்கை | உடல்கள் புதைக்கப்பட்ட விதம் மற்றும் நிலையை கருத்தில் கொண்டு, சட்டவிரோதமான புதைப்புகள் மற்றும் நீதிமன்றத்திற்கு வெளியான கொலைகள் நிகழ்ந்திருக்க நியாயமான சாத்தியம் உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டது. |

### அட்டவணை 2: தீவிர அகழாய்வு (ஜூன் 2026)

| தேதி | அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்கள் | முக்கிய நிகழ்வுகள் |
|---|---|---|
| 7 ஜூன் 2026 | 302 | விரிவுபடுத்தப்பட்ட தடயவியல் அகழாய்வின் போது பதிவு செய்யப்பட்டது. |
| 8 ஜூன் 2026 | 318 | மேலதிக மனித எச்சங்கள் பதிவு செய்யப்பட்டன. |
| 9 ஜூன் 2026 | 327 | நீதிமன்ற மேற்பார்வையில் பணிகள் தொடர்ந்தன. |
| 10 ஜூன் 2026 | 339 | புதிய பகுதிகள் வரைபடமிடப்பட்டன. |
| 11 ஜூன் 2026 | 341 | ஆழமான அடுக்குகள் அகற்றப்பட்டன. |
| 12 ஜூன் 2026 | 353 | எண்ணிக்கை 350-ஐத் தாண்டியது. |
| 14 ஜூன் 2026 | 355 | தடயவியல் பதிவு தொடர்ந்தது. |
| 15 ஜூன் 2026 | 360 | எண்ணிக்கை 360 ஆனது. |
| 16 ஜூன் 2026 | 366 | பல அகழிக் குழிகளில் பணிகள் நடைபெற்றன. |

| | | |
|---|---|---|
| 17 ஜூன் 2026 | 380 | குறிப்பிடத்தக்க அளவில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. |
| 18 ஜூன் 2026 | 387 | நீதிமன்ற மற்றும் தடயவியல் கண்காணிப்பு தொடர்ந்தது. |
| 19 ஜூன் 2026 | 394 | நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவினரால் பதிவு செய்யப்பட்டது. |
| 21 ஜூன் 2026 | 405 | எண்ணிக்கை 400-ஐக் கடந்தது. |
| 22 ஜூன் 2026 | 412 | 412 அடையாளம் காணப்பட்டன; 409 முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன. |

### அட்டவணை 3: சமீபத்திய முன்னேற்றங்கள் (ஜூலை 2026)

| காலப்பகுதி | எண்ணிக்கை | முக்கிய கண்டுபிடிப்புகள் & தகவல்கள் |
|---|---|---|
| ஜூலை நடுப்பகுதி | ~425+ | மேலும் சிறுவர்களின் எச்சங்கள், தனிப்பட்ட பொருட்கள் மற்றும் ஆடைத்துண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. |
| 20 ஜூலை 2026 | 446 | மன்னாரை விட **செம்மணி** இலங்கையில் அகழாய்வு செய்யப்பட்ட மிகப் பெரிய புதைகுழியாக மாறியது. இணைந்த இரட்டைக் குழந்தைகள் என சந்தேகிக்கப்படும் எச்சங்களும் அமர்ந்த நிலையில் புதைக்கப்பட்ட உடல்களும் கண்டறியப்பட்டன. |
| 24–28 ஜூலை 2026 | 480 அடையாளம் / 479 அகழ்வு | 96 நாட்கள் நடைபெற்ற அகழாய்வில் 480 எச்சங்கள் அடையாளங்காணப்பட்டு 479 அகழ்ந்தெடுக்கப்பட்டன. 437வது மனித எச்சத்தின் விலா எலும்புகளில் இரும்புத் தகடு மற்றும் பல இரும்பு ஆணிகள் கண்டறியப்பட்டன. மூன்றாம் கட்ட அகழாய்வு தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. |
| 04 ஆகஸ்ட் 2026 | அகழாய்வு மீண்டும் தொடக்கம் | நீதிமன்ற உத்தரவின்படி மூன்றாம் கட்டத்தின் மேலதிக அகழ்வுப் பணிகள் (56 நாட்கள் நீடிப்புக்கு அனுமதி) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டன. |
| 15 ஆகஸ்ட் 2026 | 562 அடையாளம் / 557 அகழ்வு | 107வது நாள் அகழாய்வில் மேலும் 8 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டு, 10 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. |

| | | |
|---|---|---|
| | | மேலதிக சோதனைக் குழிகளும் (Test pits) அமைக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. |
| 17 ஆகஸ்ட் 2026 | 572 அடையாளம் / 565 அகழ்வு | 108வது நாள் அகழ்வுப் பணிகளின் போது மேலும் 10 எலும்புக்கூடுகள் புதிதாக அடையாளம் காணப்பட்டு, 9 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இதன்மூலம் இதுவரை மொத்தம் **572 மனித எச்சங்கள்** அடையாளம் காணப்பட்டு, **565 எச்சங்கள்** முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. |

## இலங்கையில் அகழாய்வு செய்யப்பட்ட பிற முக்கிய புதைகுழிகள்

| புதைகுழி இடம் | அகழாய்வு காலம் | அகழ்ந்து எடுக்கப்பட்டவை | வரலாற்றுப் பின்னணி |
|---|---|---|---|
| மன்னார் (சத்தோச / திருக்கேதீஸ்வரம்) | 2013–2014 & 2018–2019 | 346 | கட்டுமானப் பணியின் போது கண்டுபிடிக்கப்பட்டது; 29 சிறுவர்களின் எச்சங்கள் உட்பட. உள்நாட்டுப் போர் கால காணாமல் ஆக்கல்களுடன் தொடர்புடையது. |
| மாத்தளை | 2012–2013 | 155 | மாத்தளை வைத்தியசாலை அருகில் கண்டுபிடிக்கப்பட்டது; 1987–1989 JVP கிளர்ச்சிக் கால சட்டவிரோத படுகொலைகளுடன் தொடர்புடையது. |
| கொக்குத் தொடுவாய் (முல்லைத்தீவு) | 2023–2024 | 40+ | குடிநீர் குழாய் அமைக்கும் போது கண்டுபிடிக்கப்பட்டது; பெண் போராளி/பொதுமக்கள் சீருடைகள் மற்றும் பொருட்கள் மீட்கப்பட்டன. |
| சூரியகந்த (எம்பிலிப்பிட்டி) | 1994 | 30 | 1989–1990 கிளர்ச்சி காலத்தில் காணாமல் ஆக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் விசாரணையைத் தொடர்ந்து கண்டுபிடிக்கப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| துரையப்பா விளையாட்டரங்கு (யாழ்ப்பாணம்) | 1999 | 25 | விளையாட்டரங்கு புனரமைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டது; 1990களின் நடுப்பகுதி இராணுவ நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. |
| செம்மணி (முதல் அகழாய்வு) | 1999 | 15 | முன்னாள் இராணுவ வீரர் சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியத்தின் அடிப்படையில், 1996ஆம் ஆண்டின் காணாமல் ஆக்கல்கள் தொடர்பாக அகழப்பட்டது. |
| கல்பிட்டி | 2014 | 14 | கடற்படை முகாமிற்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்டது; போர் கால காணாமல் ஆக்கல்களுடன் தொடர்புடையது. |

## செம்மணி தடயவியல் ஆதாரங்களின் சட்ட மற்றும் குற்றவியல் பகுப்பாய்வு

1. **மிகப்பெரிய அளவிலான மனித எச்சங்கள் (572 எச்சங்கள்)**

- **குற்ற வகைப்பாடு:** மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் (கொலை, துன்புறுத்தல், கட்டாயக் காணாமல் ஆக்குதல்) / திட்டமிட்ட கட்டாயக் காணாமல் ஆக்கல்கள்.

- **தடயவியல் விளக்கம்:** ஒரே இடத்தில் 572 எச்சங்கள் மீட்கப்பட்டிருப்பது, இது தனித்தனி சம்பவங்களின் விளைவு அல்ல என்பதையும், பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட பரவலான அல்லது திட்டமிட்ட தாக்குதலையும் காட்டுகிறது (ரோம் சட்டம் பிரிவு 7).

- **சட்டரீதியான விளைவு:** இவ்வளவு பெரிய அளவிலான புதைப்புகள், திட்டமிட்ட அமைப்புசார் ஒருங்கிணைப்பு மற்றும் புதைப்பிடத்தை தொடர்ந்து பயன்படுத்தியமையை வெளிப்படுத்துகின்றன. இது அரச அதிகாரிகளின் தொடர்பு, அரசின்

அனுமதி அல்லது கட்டளைப் பொறுப்பு (Command Responsibility) இருந்திருக்கக் கூடிய சாத்தியத்தை வலுப்படுத்துகிறது.

2. **வயது மற்றும் மக்கள் தொகை அமைப்பு (கைக்குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள்)**
   - **குற்ற வகைப்பாடு:** பாதுகாக்கப்பட்ட பொதுமக்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள் / இன அழிப்பு / மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்.

   - **தடயவியல் விளக்கம்:** 10 மாதங்களுக்கும் குறைந்த குழந்தைகள், 4-5 வயது சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெரியவர்கள் ஒன்றாகக் கண்டறியப்பட்டமை, இவர்கள் ஆயுத மோதலில் ஈடுபடாத பாதுகாக்கப்பட்ட பொதுமக்கள் (Personnes Protégées) என்பதை உறுதிப்படுத்துகிறது.

   - **சட்டரீதியான விளைவு:** ஜெனீவா ஒப்பந்தங்களின் பொதுப் பிரிவு 3 மற்றும் கூடுதல் நெறிமுறை II ஆகியவற்றின் கீழ் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளை இலக்கு வைப்பது போர்க்குற்றமாகும். மேலும், குடும்பங்கள் முழுமையாக இலக்கு வைக்கப்பட்டிருப்பது, தேசிய, இன அல்லது மதக் குழுவை அழிக்கும் நோக்கத்தை (Mens Rea) வெளிப்படுத்துகிறது; இது 1948 இன அழிப்பு ஒப்பந்தத்தின் பிரிவு II-ன் கீழ் இன அழிப்பு குற்றத்திற்கான ஆதாரமாக அமையும்.

3. **உடல்கள் புதைக்கப்பட்ட விதம் (அமர்ந்த நிலை, ஒழுங்கற்ற குவிப்பு, பின்னிப் பிணைந்த எச்சங்கள்)**

   - **குற்ற வகைப்பாடு:** நீதிமன்ற விசாரணையின்றி மேற்கொள்ளப்பட்ட கொலைகள் / சித்திரவதை / மனித கண்ணியத்தை அவமதிக்கும் செயல்கள்.

   - **தடயவியல் விளக்கம்:**
     **ஒழுங்கற்ற குவிப்பு**: அவசரமாகவும் மறைமுகமாகவும் உடல்கள் வீசப்பட்டிருப்பது கொலையை மறைக்கும் நோக்கத்தைக் காட்டுகிறது. 90%-க்கும் அதிகமான உடல்களில் ஆடைகள்

இல்லாதது மத வழிபாட்டு முறைகளின்படி அடக்கம் செய்யப்படவில்லை என்பதை நிரூபிக்கிறது.

**அமர்ந்த நிலை**: பாதிக்கப்பட்டவர்கள் கைகள் கட்டப்பட்டோ, மண்டியிட வைக்கப்பட்டோ அல்லது தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கொல்லப்பட்டிருக்கலாம்.

**பின்னிப் பிணைந்த எச்சங்கள்**: மரணத்திற்கு முன் உயிர் காக்க ஒருவரையொருவர் பற்றிக் கொண்டமை அல்லது ஒரே நேரத்தில் கூட்டாகக் கொல்லப்பட்டு ஒரே குழியில் வீசப்பட்டமையைக் காட்டுகிறது.

4. **தடயவியல் பொருள் ஆதாரங்கள் (இரும்புத் தகடு, ஆணிகள், அகற்றப்பட்ட ஆடைகள், சிறுவர்களின் பொருட்கள்)**

- **குற்ற வகைப்பாடு:** நீதிமன்ற விசாரணையின்றி மேற்கொள்ளப்பட்ட கொலைகள் / சித்திரவதை / அடையாளங்களை மறைத்தல்.

- **தடயவியல் விளக்கம்:**
  **இரும்புத் தகடும் ஆணிகளும்:** 437வது மனித எச்சத்தின் விலா எலும்புகளில் இரும்புத் தகடும் ஆணிகளும் கண்டறியப்பட்டது, மரணத்திற்கு முன் ஏற்பட்ட கடுமையான தாக்குதல், நசுக்கப்பட்ட காயங்கள் அல்லது கொடூரமான சித்திரவதையைக் குறிக்கிறது.

  **அகற்றப்பட்ட ஆடைகள்:** அடையாளங்களை அழிப்பதற்காகவும், இறப்பிற்கு முன் அவமானப்படுத்துவதற்காகவும் (மனித கண்ணியத்திற்கு எதிரான அவமதிப்பு) ஆடைகள் அகற்றப்பட்டுள்ளன.

  **குழந்தைகளின் பொருட்கள்:** பாடசாலைப் பைகள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பாலூட்டும் பாட்டில்கள் போன்றவை பாதிக்கப்பட்டவர்கள் அன்றாட வாழ்வின் போது பிடிக்கப்பட்ட பொதுமக்கள் என்பதை நிரூபிக்கின்றன.

5. **பல அடுக்குகளாக புதைக்கப்பட்டிருப்பது (Stratigraphy பகுப்பாய்வு)**
    - **குற்ற வகைப்பாடு:** கட்டாயமாகக் காணாமல் ஆக்குதல் / நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட கூட்டுக் கொலைகள்.
    - **தடயவியல் விளக்கம்:** பல மண் அடுக்குகளில் மனித எச்சங்கள் காணப்படுவது, செம்மணி நீண்டகாலமாக உடல்களை மறைக்கும் இடமாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தப்பட்டதை உறுதிப்படுத்துகிறது.
    - **சட்டரீதியான விளைவு:** சர்வதேச சட்டத்தின் கீழ், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை வெளிப்படுத்தப்படும் வரை கட்டாயக் காணாமல் ஆக்கல் என்பது தொடர்ச்சியாக நடைபெறும் குற்றமாகும்.

## சர்வதேச சட்டத்தின் கீழ் பொருந்தக்கூடிய முக்கிய குற்றங்களின் சுருக்கம்

1. **இன அழிப்பு:** தேசிய, இன அல்லது மத அடையாளத்தின் அடிப்படையில் கைக்குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் குடும்பங்களை திட்டமிட்டு அழித்தல் (1948 இன அழிப்பு ஒப்பந்தம் – பிரிவு II / ரோம் சட்டம் – பிரிவு 6).
2. **நீதிமன்ற விசாரணையின்றி மேற்கொள்ளப்பட்ட கொலைகள்:** அரசு அதிகாரிகளால் அல்லது அவர்களின் ஒப்புதலுடன் சட்டவிரோதமாக உயிரைப் பறித்தல் (ICCPR – பிரிவு 6 / ஐ.நா. Minnesota Protocol).
3. **மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள்:** பொதுமக்கள் மீது பரவலாகவும் திட்டமிட்ட முறையிலும் பெருமளவிலான கொலைகள் மற்றும் கட்டாயக் காணாமல் ஆக்கங்களை மேற்கொள்வது (ரோம் சட்டம் – பிரிவு 7).
4. **கட்டாயமாகக் காணாமல் ஆக்குதல்:** கைது அல்லது கடத்தலுக்குப் பின் தகவல்களை மறைத்தல் (ICPPED).

5. **போர்க் குற்றங்கள்:** ஆயுத மோதலின் போது பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் கொலை, சித்திரவதை மற்றும் தாக்குதல்கள் (ஜெனீவா ஒப்பந்தங்கள் பொதுப் பிரிவு 3 / ரோம் சட்டம் – பிரிவு 8).

**Contact: S Sangeeth** **Tel:** +44 (0) 7412 435 697
**Email:** news@britishtamilsforum.org

**Notes to Editors:**
**British Tamils Forum** exists to harness the skills and the knowledge of the members of the forum, well-wishers and significant others including mainstream decision makers in the UK with the aim of alleviating the sufferings of the Tamils community in the Island of Sri Lanka and to further their right to self-determination within a democratic frame work under pinned by international law, its covenants and conventions. For more information info@britishtamilsforum.org and/or visit: www.britishtamilsforum.org